தமிழ்நாடு அரசு

<u>சுருக்கம்</u>

கல்வி தகுதி - பொதுப் பணிகளில் நியமனம் செய்ய தொழிற்கல்வி பட்டங்களான (Professional Degrees )சட்டப் பட்டப் படிப்பு( B.L. )பொறியியல் பட்டப் படிப்பு( B.E. )மற்றும் மருத்துவப் பட்டப் படிப்பு( MBBS)கால்நடை மருத்துவப் பட்டப் படிப்பு(B.V.Sc. ) ஆகியவற்றை இளங்கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்புகளுக்கு (B.A.,B.Sc., etc. ) சமமானதாகக் கருதி அங்கீகாரம் அளித்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (ஆர்) துறை

அரசு ஆணை நிலை எண்.318 நாள்:29.12.97

122945 படிக்கப்பட்டது:-

1. அரசு ஆணை நிலை எண்.441, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்(ஆர்)துறை, நாள்.20.12.93.
2. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளரின் கடித எண்.2088/BA 4/91, நாள்.27.6.91.
3. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச்செயலாளரின் கடித எண்.6190/PD-D 3/93, நாள்.19.1.95.
4. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையச் செயலாளரின் கடித எண்.8500/RND- A 5/96, நாள்.6.5.97.

---

<u>ஆணை:</u>

அரசினர் கண்காணிப்பு இல்லத்தில் கண்காணிப்பாளர் பணியிடத்திற்கு இளங்கலைப் பட்டம், இளங்கலை அறிவியல், வணிகவியல் பட்டம், வணிக நிர்வாகப் பட்டம், இளங்கலை இலக்கியம்(B.A./ B.Sc./ B.Com/ BOL/ BBM/ B.Litt. )ஆகிய பட்டப் படிப்புகளை கல்வி தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இப்பணியிடத்தை நிரப்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 1990-ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்வில் கலந்து கொண்ட நபர்களில் ஒருவர் மேலே குறிப்பிட்ட பட்டப் படிப்புகளில் தகுதி பெறாமல் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட சட்டப் பட்டப் படிப்பை பெற்றிருந்தார். எனினும், இக்கல்வித் தகுதி இப்பதவிக்குரிய தகுதிகளில் ஒன்றாக நிர்ணயம் செய்யப்படவில்லை. எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் இது குறித்து மேல்நிலை பள்ளிக் கல்வித் தேர்வில் (HSC)தேர்வு பெற்ற பின்னர் சட்டப் பட்டப் படிப்புக்கு தேர்வு பெற ஐந்தாண்டுகள் ஆகிறது எனவும், ஆனால் பட்டப் படிப்புகளில் தேர்வு பெற 3 ஆண்டுகளே ஆகின்றன எனவும், எனவே, பள்ளி மேல்நிலை கல்வி தகுதி பெற்ற பின்னர் 5 ஆண்டுகள் படித்து பெற்ற சட்டப் படிப்பினை முதுநிலைப் பட்டப் படிப்பிற்கு இணையாக அல்லது பட்டப் படிப்புகளுக்கு மேலாக கருதலாம் எனவும், இதற்கொப்ப பொது விதிகளில் திருத்தம் கொண்டுவரும்படி அரசைக் கேட்டுக் கொண்டது.

2. மேலே கூறப்பட்ட தேர்வாணையத்தின் ஆலோசனையின் மீது சென்னை பல்கலைக் கழகப் பதிவாளர் மற்றும் சட்டக் கல்வி இயக்குநர் ஆகியோரின் கருத்துப் பெறப்பட்டு, 20.12.93 நாளிட்ட பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அரசு ஆணை நிலை எண்.441-ன் மூலம் தேர்வாணையத்தின் தலைவரை தலைமையாகக் கொண்ட குழுவின் முன்னர் பரிந்துரைக்கு வைக்கப்பட்டது. 14.12.96 அன்று நடந்த அக்குழுக் கூட்டத்தில் ஐந்து ஆண்டு சட்டப் பட்டப் படிப்பை இளநிலை பட்டப்படிப்புகளுக்கு உயர்வானதொரு பட்டத்திற்கு இணையானதாகக் கருத முடியாது என்றும், சட்டப் பட்டப் படிப்பு சட்டக் கல்வியிலுள்ள இளநிலை பட்டப் படிப்பு ஆகும், எனவே, ஐந்து ஆண்டு பட்டப் படிப்பை இளநிலையில் உள்ள கலை, அறிவியல் மற்றும் இலக்கியம் போன்ற பட்டப் படிப்புக்கு இணையானதாகக் கருதலாம் எனவும் பரிந்துரை செய்தது. குழுவின் பரிந்துரையினை ஆய்வு செய்தபோது, இதேபோன்று, இதர தொழில் கல்வியில் வழங்கப்படும் பட்டங்களையும்(பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவத் துறையில் வழங்கப்படும் இளங்கலை பட்டப் படிப்பு) இளங்கலை மற்றும் அறிவியல் பட்டப் படிப்பிற்கு சமமானதாக் கருதலாம் என்பது குறித்தும் சம்பந்தப்பட்டத் துறைகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது.

3. மீண்டும் 11.4.97 அன்று நடந்த குழுக் கூட்டத்தில் இது குறித்து விவாதிக்கப்பட்டு, தொழிற்கல்வி, பட்டங்களையும் (அதாவது பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் ஆகிய துறைகளில் வழங்கப்படும் இளநிலை பட்டங்களையும், மேல்நிலை பள்ளிக் கல்வித் தேர்ச்சிக்குப் பின்னர் 5 ஆண்டு சட்டப் படிப்பில் வழங்கப்படும் இளநிலை பட்டத்தையும்) இளங்கலை மற்றும் அறிவியல் இளநிலை பட்டப் படிப்புகளுக்குச் (B.A., B.Sc., B.Litt. ) சமமாகக் கருதலாம் என இக்குழு தீர்மானித்து அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

4. இக்குழுவின் பரிந்துரைகளை அரசு தீவிர பரிசீலனை செய்தபின் இதனை ஏற்றுக் கொள்ளலாம் என முடிவெடுத்துள்ளது. அவ்வாறே தொழிற்கல்வியில் (Professional Degrees ) (அதாவது பொறியியல், மருத்துவம், கால்நடை மருத்துவம் ஆகிய துறைகளில் வழங்கப்படும் இளநிலை பட்டங்களையும் (B.E., MBBS., B.V.Sc.) மேல்நிலை பள்ளிக் கல்வித் தேர்ச்சிக்குப் பின்னர் 5 ஆண்டு சட்டப் படிப்பில் வழங்கப்படும் இளநிலை பட்டத்தையும் (B.L.) இளங்கலை மற்றும் அறிவியல் இளநிலை பட்டப் படிப்புகளுக்குச் (B.A., B.Sc., B.Litt., etc.) சமமாகக் கருதி பொதுப் பணிகளில் வேலை வாய்ப்பிற்கு அங்கீகாரம் அளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ. பாஸ்கரதாஸ்
அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>:

அனைத்துத் தலைமைச் செயலகச் செயலாளர்கள், சென்னை-9
அனைத்துத் துறை தலைமை அலுவலர்கள்
செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-2
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை-35
பதிவாளர், சென்னை பல்கலைக் கழகம், சென்னை-5

<u>நகல்</u>:

அனைத்துத் தலைமைச் செயலகத் துறைகள், சென்னை-9
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத்துறையின் அனைத்துப் பிரிவுகள், சென்னை-9
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9

/பணிந்தனுப்பப்படுகிறது/

[signature]
பிரிவு அலுவலர்